## மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம், (தமிழ்நாடு அரசு நிறுவனம்), கடலூர்

28

அலுவலக முகவரி :– சிப்காட் வளாகம், குடிகாடு,
கடலூர் 607 005
தொலைபேசி எண்: 04142- 239310 & 239152

ந.க.எண்.ஆர்.வி.10/955/ 2007/ நாள்: 20. 06.2007

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) சார்பில் நடத்தப்பட்டு வரும் மதுபானக் கடையை சார்ந்த மதுக்கூடங்களில் தின்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில் சேகரம் செய்ய (ஒட்டு மொத்த/அனுமதி) வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

விவரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கடலூர் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் 02.07.2007 காலை 11.00 மணி முதல் 17.07.2007 பிற்பகல் 5.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒன்றுக்கு ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வீதம் (விற்பனை வரி உட்பட) பணமாக அல்லது மாவட்ட மேலாளர் டாஸ்மாக் கடலூர்–5 என்ற பெயரில், கடலூர் மாவட்டத்தில் காசாக்கக்கூடியதான வங்கி வரை வோலை (Demand Draft) மூலமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அஞ்சலக கால தாமதங்களுக்கு தமிழ்நாடு மாநில வாணிப கழகம் பொறுப்பல்ல. மாவட்ட மேலாளர், டாஸ்மாக், கடலூர்–5 என்ற பெயரில் மாநகராட்சி/நகராட்சி பகுதிக்குட்பட்ட மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதமும், மற்ற பகுதிகளில் அமைந்துள்ள மதுக்கூடங்களுக்கு மதுக்கூடம் ஒன்றுக்கு ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதமும் "பிணை வைப்புத் தொகையாக " ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்துடனும் வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

17.07.2007 அன்று மாலை 5.00 மணி வரை தான் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நிர்ணயிக்கப்பட்ட/குறிப்பிட்ட நேரம்/தேதிக்கும் பிறகு (அஞ்சலகம் தாமதம் உட்பட பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிஅளித்தவருகைபுரிந்த விண்ணப்பதாரர்கள் முன்னிலையில்,மாவட்டமேலாளர்,டாஸ்மாக்,கடலூர்அவர்களால், அவர்களின் அலுவலகத்தில் 18.07.2007 அன்று காலை 10.00 மணிக்குஒப்பந்தப்புள்ளிகள்திறக்கப்படும்.எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்தவித காரணங்களையும் கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் முடிவு செய்யப்பட்ட தொகையைபோல இரண்டு மாதங்களுக்கான தொகையை, காப்புத் தொகையாக மாவட்ட மேலாளர் கணக்கில் அவர் குறிப்பிட்ட தேதிக்குள் ஏவ்வொரு மதுபானக்கூடத்திற்கும் தனித்தனியாக காப்புத் தொகையாக செலுத்த வேண்டும். இதை தவிர மேலும் உரிமம் எடுத்து நடத்தப்படும் முதல் மாதத்திற்காக உரிமத் தொகையினையும் தனியாக செலுத்த வேண்டும்.

மதுக்கடைகளின் பெயர் மற்றும் குறைந்தபட்ச குறுமத்தொகை விபரம் குறித்து கடலூர் மாவட்ட மேலாளர் அலவலகத்தில் அலுவலக பணி நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

டெண்டர் அனுப்பும் உறையின்மீது கண்டிப்பாக கடை எண் மற்றும் அமைந்துள்ள இடம் பற்றிய விபரங்கள் குறிக்கப்படவேண்டும்.

V. [signature] 2/6/07

மாவட்ட மேலாளர்/
துணை ஆட்சியர்,
டாஸ்மாக்,கடலூர் –5.

[initials] 2/6/07